1994 நவம்பர் 8]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *வினா எண். 50, திரு. கா. பூ. முனுசாமி, மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர்.*

50—

பள்ளி மாணவர்களுக்கு விவசாயத் தொழில் நுட்பத்தைக் கற்றுத்தருதல்.

24687—திரு. கா. பூ. முனுசாமி:

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பள்ளி மாணவர்களுக்கு விவசாயத்திற்கு என தனிப் பிரிவு ஒதுக்கி, மாணவர்களுக்கு விவசாயத் தொழில் நுட்பத்தை கற்றுத்தர அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர் : *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பள்ளி மாணவர்களுக்கு விவசாயத் தொழில் நுட்பத்தைக் கற்றுத்தர அரசு முடிவெடுத்துள்ளது. இது தொடர்பாக வேளாண்மைக் கல்வியைப் பாடத்திட்டத்தில் சேர்ப்பது குறித்து தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத் துணை வேந்தர் தலைமையில் அமைக்கப்பட்ட குழு தனது அறிக்கையை 2-5-1994 அன்று அரசுக்குக் கொடுத்துள்ளது. இந்த அறிக்கை அரசின் ஆய்வில் உள்ளது.*

திரு. கா. பூ. முனுசாமி: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பள்ளி மாணவர்களுக்கு விவசாயத் தொழில் நுட்பத்தைக் கற்றுத்தர வேண்டும் என்பதைக் கொள்கை அளவில் ஏற்றுக்கொண்டதற்காக இந்த அரசுக்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அதே நேரத்தில் பள்ளியில் பயில்கிற மாணவர்களில் 60 சதவீதம் பேர் கிராமப்புறங்களில் இருந்து வருகிற, விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களில் கிட்டத்தட்ட 60 சதவீதம் மாணவர்கள் ப்ளஸ் 2 தேர்வுக்கு மேல் கல்லூரிக்கே செல்வதில்லை. எனவே வருகிற நிதியாண்டில் அல்லது அடுத்த கல்வியாண்டில் இந்தப் பாடத்திட்டத்தைச் சேர்க்க அரசு முயற்சி எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசு, வேளாண்மைத் தொழில்நுட்பத்தை பள்ளி மாணவர்கள் பயில வேண்டும் என்ற கொள்கையை 1992-ஆம்*

ஆண்டே ஏற்றுக்கொண்டிருக்கிறது. அந்தக் கொள்கையை ஏற்றுக்கொண்டதன் அடிப்படையில்தான் தனி நிபுணர்கள் குழு அமைக்கப்பட்டு பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்டு, இன்று அதை அரசு பரிசீலித்துக்கொண்டிருக்கிறது என்று நான் குறிப்பிட்டுச் சொன்னேன். வருகிற 1995-96 ஆம் கல்வி ஆண்டில் இந்த வேளாண்மைப் பாடத்திட்டங்கள் பள்ளி வகுப்பில் சேர்க்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண். 51, திரு. எஸ். அன்பழகன், மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர்.

51—

நாமக்கல் பகுதியில் சூரியகாந்தி பயிரிடுவதை மேம்படுத்துதல்.

34268—திரு. எஸ். அன்பழகன்:

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் பகுதியில் சூரியகாந்தி அதிகமாகப் பயிரிடுவதற்கு அரசு தனிமுயற்சி எடுத்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) சேலம் மாவட்டம், நாமக்கல் கோட்டத்தில் சூரியகாந்தி பயிரினை அதிகமாகப் பயிரிடுவதற்கு தேவைப்படும் அனைத்து முயற்சிகளும் கடந்த சில ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதற்காக எண்ணெய்வித்து உற்பத்தி திட்டத்தின் கீழ் உள்ள இனங்களான மானியங்கள் - விதை விநியோகம், விதை கொள்முதல், சிறுதளைப்பைகள் (Mini Kits) விநியோகம் போன்றவைகளுக்காக செலவிடப்படுகின்றன.

இந்த ஆண்டு (1994-95) எண்ணெய்வித்து உற்பத்தி திட்டத்தின் கீழ் நாமக்கல் கோட்டத்தில் சூரியகாந்தி சாகுபடிக்கு இலக்கு 4,500 ஹெக்டேர் பரப்பு நிர்ணயிக்கப்பட்டு ரூ. 1,77,700 செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.